

மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம் கீழ் செவலம்பாடி ஊராட்சியில் அதிமுக பா.ஜ.க. நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

### மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமை!

# நெல்லை மத்திய மாவட்டத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர் சேர்க்கை!

## அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார்!

நெல்லை.ஜூன்.21-

நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.ஏற்பாட்டில் “ஓரணியில் தமிழ்நாடு” என்ற தலைப்பில் தமிழக மக்களை கழகத்தில் உறுப்பினராக ஒன்றிணைக்க உறுப்பினர் சேர்க்கையை கழக அமைப்புச் செயலாளர் - நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார்.இந்நிகழ்வில் மீன்வளம்,மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் மைதீன்கான் ஆகியோர் பங்கேற்றனர்.

மதுரையில் ஜூன் 1 ம் தேதி நடைபெற்ற கழக பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க “ஓரணியில் தமிழ்நாடு” என்ற தலைப்பில் தமிழக மக்களை கழகத்தில் ஒருங்கிணைக்க புதிய உறுப்பினர்கள் சேர்க்கையை தீவிர படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அதன்படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை படிவத்தை கழக நிர்வாகிகளிடம் வழங்கும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று கழக நிர்வாகிகளிடம் வழங்கினார்.

நிகழ்வில் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநகராட்சி மேயர் இராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், மாநில சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவர் முன்னாள் அமைச்சர் மைதீன் கான்,நெல்லை மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன்(மேற்கு) ஏ.எல்.பி. தினேஷ் (கிழக்கு) மாவட்ட அவை தலைவர் முருகன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், பேச்சிபாண்டியன்,சித்திக், பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள் மேயர் சரவணன்,பரமசிவஐயப்பன்,நடராஜன்,

மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன், கிரிஜா குமார், மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,பிரபு பாண்டியன்,சுதா மூர்த்தி,மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, பகுதிச் செயலாளர்கள் சுப்பிரமணியன், துபை சாகுல், நமச்சிவாயம், சங்கர், டாக்டர் சங்கர், செய்யது முகைதீன், சாமுவேல், அண்டன் செல்லத்துரை, ஒன்றிய செயலாளர்கள் அருள் மணி, அன்பழகன், மாரியப்பன், மண்டல தலைவர்கள் மகேஸ்வரி, கதீஜா இக்லாம் பாசிலா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, துணை அமைப்பாளர் மீரான் மைதீன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி,

நெல்லை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி,

மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,மாமன்ற உறுப்பினர்கள் கந்தன், உலகநாதன், ரம்சான் அலி, ஜெகநாதன், கோகுலவாணி சுரேஷ், சின்னத்தாய் கிருஷ்ணன், அனார்கலி, அப்துல் சுபகாண, அலி சேக் மன்சூர், சபி அமீர் பாத், சகாய ஜூலியட் மேரி மற்றும் அனிதா,செல்வலட்சுமி அமிதாப், அந்தோணி, சேக் உஸ்மானி, ஆவின் கல்யாணி,பேபி கோபால், மேகை செல்வம், உஸ்மான் துரை யரசன், குணா, ராவணன், சாய்பாபா, எல்ஐசி பேச்சிமுத்து உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல் நெல்லை மேற்கு மாநகரத்தில் உள்ள நெல்லை பேட்டை கிழக்கு,மேற்கு,தச்சநல்லூர் வடக்கு பகுதியில் 28 வார்டுகளிலும் பூத் வாரியாக சென்று உறுப்பினர் சேர்க்கை பணியில் ஈடுபடுவதற்கான கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேருவிடம் நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன்,கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ் ஆகியோர் உறுப்பினர் படிவங்களை பெற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து நெல்லை மத்திய மாவட்ட நிர்வாகிகள், மாநகர மேற்கு, கிழக்கு, நிர்வாகிகள் புதிய உறுப்பினர் சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கி விட்டனர்.

# சென்னை விமானநிலையத்தில் 8 விமானங்கள் திடீர் ரத்து!

## பயணிகள் அவதி!

சென்னை, ஜூன். 21-

சென்னை விமான நிலையத்தில் இருந்து டெல்லி, மும்பை செல்லும் 8 உள்நாட்டு விமானங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

சென்னையில் இருந்து மும்பை, டெல்லி செல்லும் ஏர் இந்தியா பயணிகள் விமானம், தூத்துக்குடி செல்லும் ஸ்பைஸ் ஜெட் விமானம் உட்பட 4 புறப்பாடு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதேபோல், ஹைதராபாத், தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு வர வேண்டிய ஸ்பைஜெட் ஏர் லைன்ஸ் விமானங்கள், டெல்லியில் இருந்து ஏர் இந்தியா விமானம் உட்பட 4 வருகை விமானங்கள் என இன்று ஒரே நாளில் மொத்தம் 8 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதில் 5 ஏர் இந்தியா விமானங்கள், 3 ஸ்பைஜெட் விமானங்கள் அடங்கும். விமானங்கள் ரத்து செய்யப்பட்டதற்கு முறையான காரணத்தை விமான நிறுவனங்கள் தெரிவிக்காததால், பயணிகள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

### விழுப்புரம் வடக்கு – மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியத்தில்

# அ.தி.மு.க. - பா.ஜ.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் வாழ்த்து!

செஞ்சி, ஜூன். 21-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்ஏற்பாட்டில் வட வெட்டி ஊராட்சியை சேர்ந்தஅதிமுக மகளிர் அணி மீனாட்சி ராஜமாணிக்கம், அதிமுக நிர்வாகிகள் மோகன்ராஜ், பழனி, பா.ஜ.க. ஒன்றிய விவசாய அணி தலைவர் வேல்முருகன் ஆகியோர் அக்கட்சியில் இருந்து விலகி கீழ் பாப்பாம்பாடியில்நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

திமுகவில் இணைந்த நிர்வாகிகளுக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

இதில் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய நிர்வாகிகள் செந்தில்குமார், ரவிச்சந்திரன், அர்ஷத், செல்வம், எஸ்.பி. சம்பத், தோப்பு சம்பத், ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜா, விஜய லட்சுமி ஜெயக்குமார், பாலாஜி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் மணிகண்டன், நிர்மல் ராஜ் , மாணவர் அணி ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கடலூர் முதுநகர் மாலுமியார் பேட்டையில் புதிதாக கட்டப்பட்ட ரேஷன் கடையினை கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி திறந்து வைத்தார். இதில் குடிமைப் பொருள் தனி தாசில்தார் ஜெயக்குமார், கூட்டுறவு சார்பதிவாளர் பொது விநியோகத் திட்டம் தன்ராஜ், கூட்டுறவு சார்பதிவாளர் புருஷோத்தமன், முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், மாநகராட்சி கவுன்சிலர்கள் கே.ஜி.எஸ்.சரத் தினகரன், ராதிகா பிரேம்குமார், கீர்த்தனா ஆறுமுகம், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், முன்னாள் கவுன்சிலர் கோமதி சம்பத், இளைஞர் அணி பிரகாஷ், ரோட்டரி ராசன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை தெற்கு, வடக்கு, மத்திய ஒன்றியங்களை சேர்ந்த BLA2 பாக முகவர்கள், BDA முகவர்கள், ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம. ஜெயச்சந்திரன் , தொகுதி பார்வையாளர் சிவ.ஜெயராஜ், ஒன்றிய செயலாளர்கள் கல்பட்டு வி.இராஜா, ஆர்.முருகன் , ஆர்.பி. முருகன், ஒன்றிய குழு தலைவர் என்.கலைச்செல்வி, பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வீரராகவன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

# முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

## பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.அரிபாஸ்கர் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.06.2025 | பூலாம்பாடி | மேற்கு மந்தைவெளி, கலைஞர் திடல் | விஜயரத்தினம் அ.அருண்குமார் |
| 2 | | அரும்பாவூர் | பாலக்கரை | விஜயரத்தினம் ந.காருண்யா |
| 3 | | ஆலத்தூர் கிழக்கு | சாத்தனூர் | எசனை ஆறுமுகம் அ.விஜயலெட்சுமி |
| 4 | 22.06.2025 | வேப்பந்தட்டை கிழக்கு | தம்பை | விஜயரத்தினம் இரா.கனிமொழி |
| 5 | | வேப்பந்தட்டை மேற்கு | நெற்குணம் | எசனை ஆறுமுகம் ப.வெங்கடேஷ் |
| 6 | 23.06.2025 | வேப்பூர் தெற்கு | காடூர் | விஜயரத்தினம் அ.சுஹாசினி |
| 7 | 24.06.2025 | பெரம்பலூர் நகரம் | தேரடி தெரு | எசனை ஆறுமுகம் கு.குமரவேல் |
| 8 | 25.06.2025 | லப்பைகுடிக்காடு | பேருந்து நிலையம் | விஜயரத்தினம் சேக் அல்மாஸ்அலி |
| 9 | 26.06.2025 | பெரம்பலூர் | ஆலம்பாடி ஊராட்சி | எசனை ஆறுமுகம் ஜோ. கேத்ரினா மெர்லினா |
| 10 | | குரும்பலூர் | கலைஞர் திடல் | விஜயரத்தினம் மு.ராமமூர்த்தி |

பெரம்பலூர்

நாள் : 19-06-2025





விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும் , விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், கோலியனூர் ஒன்றியம், விழுப்புரம் முதல் கல்லப்பட்டு வரையான கூடுதல் பேருந்து வழிதடத்தை கல்லப்பட்டு ஊராட்சியில் கொடியசைத்து துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் செ.புஷ்பராஜ் , பி.தெய்வசிகாமணி, இ.சச்சிதானந்தம், பி.சம்பத், அன்பரசு, செந்தில், இரா.கேசவன், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், குணசேகரன், ஜெயபால், பழனி, பாரதி ராஜா, ராமச்சந்திரன் பிரேமா நடராஜன், அங்கப்பன், ஜானகிராமன், வேலு, ஆனந்தன், சிவராமன், சாலை வெங்கடேசன், ராஜகுமாரி, பூமிநாதன், அருள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.